# காந்தி ஜெயந்தி சிறப்பு கட்டுரை - காசாங்காடு கிராமம்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுகோட்டை வட்டம், மதுக்கூர் ஊராட்சி ஒன்றியம், காசாங்காடு எனும் கிராமம் காந்தியக் கொள்கைகளை பின்பற்றி அதன் விவரங்களை அக்கிராம இணையதளத்தில் பதிவேற்றம் (www.kasangadu.com) வெளியிட்டு முன்மாதிரி கிராமமாகத் திகழ்கிறது. அவர்களின் அன்றாட விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்கின்றனர். அக்கிராமக் கட்டமைப்பு, உதாரணமாக அகலமான தார் சாலைகள், எட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கொண்ட குடிநீர் வசதி, ஐந்து பள்ளிகள், நூலகம், சுகாதார நிலையம் , பொதுத் திருமண மண்டபம் ஆகியவற்றை உள்ளடக்கி சிறப்பாக காணப்படுகிறது. மேலும் இக்கிராமத்தில் ஆடு வளர்க்கத் தடை, கட்சி கொடிகம்பதிற்குத் தடை ,பீடி, சிகரட், மது விற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது ஆச்சரியம் தருகிறது.

சிவகங்கை மாவட்டம் அரசனூரில் உள்ள பாண்டியன் சரஸ்வதி யாதவ் பொறியியல் கல்லூரி மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியல் துறை மாணவர்கள் பேரவை 27 - 09 -12 தஞ்சாவூர் மாவட்டம், பட்டுகோட்டை அருகிலுள்ள காந்திய கிராமமான காசாங்காடு சென்றனர். இப்பயணத்திற்கு கல்லூரி நிர்வாக இயக்குனர் பொறியாளர் S.P.வரதராஜன் தலைமையேற்க, கல்லூரி டீன், பேராசிரியர் R.T.சக்திதரன், உதவி பேராசிரியர்கள் R.ராஜா, M.சக்திவேல் மற்றும் கல்லூரி துறை சார்ந்த இறுதியாண்டு பயிலும் 41 மாணவர்கள் குழுவாக சென்றனர்.

## விவாதத் தொகுப்பு:

இவ்விவாதத்தில் காசாங்காடு கிராமப் பஞ்சாயத்து தலைவர் M.சதாசிவம், துணைத்தலைவர் K.ராஜ ராஜ சோழன் மற்றும் கிராம குழுவினருடன் மாணவர்கள் கலந்துரையாடினார். அவர்களின் கலந்துரையாடல் பின்வருமாறு :

**கேள்வி:**இப்படிப்பட்ட காந்திய எண்ணம் யாரால் எப்போது கொண்டு வரப்பட்டது ?
**பதில்:** இத்தகைய கட்டுபாடுகள் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் (1956

-1991) மறைந்த திரு. இரா.விசுவநாதன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு பின்பற்றப்பட்டு வருகிறது.

**<u>கேள்வி:</u>** கிராமக் கட்டமைப்பு பற்றி கூறுக.

**<u>பதில்:</u>** திரு. இரா.விசுவநாதன்அவர்களால் ஐம்பது ஆண்டுக்கு முன்னரே தொலை நோக்கு பார்வையோடு இன்றைய தலைமுறைக்கு தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, பள்ளிகள் ஆகியவை ஏற்படுத்தப் பட்டது .

**<u>கேள்வி:</u>** ஆடு வளர்க்க, புகை பிடிக்க மற்றும் கட்சி கொடியேற்ற தடை விதித்ததற்க்கான காரணம் கூறுக:

**<u>பதில்:</u>** ஆடுகள் அடுத்தவர்களின் பயிர்களை சேதப்படுத்துவதால் தகராறு உண்டாகும் என்பதால் ஆடு வளர்க்க தடை.

தீ விபத்து ஏற்படுவதை தவிர்க்க பீடி, சிகரெட் விற்கத் தடை .

அரசியல் ரீதியான மோதல்களை தவிர்க்க கட்சிக் கொடியேற்ற தடை .

**<u>கேள்வி:</u>** அப்படியானால் அரசியல் கட்சிகளை பின்பற்றுவதில்லையா?

**<u>பதில்:</u>** பின்பற்றுகிறோம். அவரவர் விருப்பத்திற்கேற்ப ரசியல் கட்சிகளை பின்பற்ற, முக்கிய நிகழச்சிகளை நடத்த எந்த தடையும் இல்லை. ஆனால் நிரந்தரமாக கோடிக் கம்பம் அமைத்துக் கொள்வதில்லை. அரசியல் ரீதியான வேறுபாடுகள் கிராமத்தில் இல்லை.

**<u>கேள்வி:</u>** இன்றைய தலைமுறை இளைஞர்கள் இக்கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொள்கின்றனரா ?

**பதில்:** ஏற்றுக் கொள்கின்றனர். குழந்தை பருவம் முதலே இதை கடைப்பிடிப்பதால் இது கட்டுப்பாடாக தெரியவில்லை. அன்றாட செயல்களைக் கற்றுக்கொள்வது போல இதையும் கற்றுக்கொள்வதால் இது கடினமாக தோன்றவில்லை.

**கேள்வி:** உங்கள் கிராம மக்களின் கல்வியறிவு பற்றிக் கூறுக.

**பதில்:** எங்கள் கிராமத்தில் உள்ள அனைவரும் (நூறு சதம்) குறைந்த பட்சம் பத்தாம் வகுப்பு வரை பயின்றுள்ளனர். நிறைய மாணவர்கள் பொறியியல் மற்றும் மருத்துவம் பயின்று உள்நாடு மற்றும் வெளிநாட்டில் பணிபுரிகின்றனர்.

**கேள்வி:** பெண்ணுரிமை பற்றிக் கூறுக.

**பதில்:**எங்கள் கிராமத்தில் கல்வி கற்க முழு சுதந்திரம் உண்டு. வீட்டு விசேஷங்கள் அனைத்திலும் பெண்களே முன்னிலை படுத்த படுகின்றனர்.

**கேள்வி:** உங்களது கிராம நிர்வாகம் பற்றிக் கூறுக.

**பதில்**: எங்கள் கிராமத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பஞ்சாயத்து தலைவர், வார்டு உறுப்பினர், ஒன்றியக் கவுன்சிலர், மாவட்டக் கவுன்சிலர் கொண்ட ஒரு குழுவும், கிராம கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்கள் கொண்ட அறங்காவலர் குழு என இரண்டு அடுக்கு முறை பின்பற்றி வருகிறது. எந்தவொரு பொது பிரச்சனையும் இவ்விரு குழுக்களின் ஒப்புதலோடு நிறைவேற்றப்படும். யாரும் தனிச்சையாக செயல்பட முடியாது .

**கேள்வி:** உங்கள் ஊரில் காவல் நிலையம் இல்லையே?

**பதில்:** அதற்கான தேவை எங்களிடம் இல்லை. எங்கள் கிராமத்தில் உள்ள சொத்து பிரச்சனை, குடும்ப பிரச்சனையை பஞ்சாயத்தினர் முன்னிலையில் பேசி நடுநிலையாக தீர்ப்பு வழங்கப்படுகிறது .

**கேள்வி:** அதற்கு அனைவரும் கட்டுபடுகின்றனரா?

**பதில்:** தீர்ப்பு மிகவும் நடுநிலையோடு எந்த பாகுபாடுமின்றி வழங்கபடுவதால் எங்கள்கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வதோடு, பக்கத்து கிராம மக்களும் பிரச்சனைகளுக்கான தீர்வுக்கு எங்கள் கிராமத்தை நாடுகின்றனர்.

**கேள்வி:** தீர்ப்பின் முடிவில் தண்டனை வழங்கப்படுமா?

**பதில்:** நிச்சயமாக. தவறுக்கேற்ற தண்டனை வழங்கப்படும். ஆனால் தவறு செய்தவரே தனது தவறை உணர்ந்து தண்டனையை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு எடுத்துரைத்தே தண்டனை வழங்கப்படும்.

**கேள்வி:** உங்கள் கிராமத்தில் ஜாதி வேறுபாடு உள்ளதா?

**பதில்:** எங்கள் கிராமத்தில் தீண்டாமை 1972 முன்னரே ஒழிக்கப்பட்டது. எந்த வேறுபாடுமின்றி ஒரே சமூகமாக வாழ்த்து வருகிறோம்.

**கேள்வி:** காதல் திருமணத்தை ஆதரிப்பீரா?

**பதில்:** முழு மனதோடு ஆதரிப்பதில்லை. ஆனால் எதிர்ப்பும் தெரிவிப்பதில்லை.

**கேள்வி:** இதன் காரணம்.

**பதில்:** இன்றைய இளைய தலைமுறையில் திருமண விசயத்தில் சரியாக தேர்ந்தெடுக்கும் அளவிற்கு பக்குவப்படவில்லை என்பது எங்களின் கருத்து.

**கேள்வி:** மின்வெட்டை சமாளிக்க ஏதேனும் முயற்சி செய்தீரா?

**பதில்:** இதுவரை இல்லை. மின்வெட்டினால் குடிநீர் விநியோகம் வெகுவாக பாதிக்க படுகிறது. எனவே சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய முயற்சி செய்கின்றோம்.

**கேள்வி:** கிராம இணையதளம் யாரால் தோற்றுவிக்கப்பட்டது?

**பதில்:** இந்த இணையதளம் 2006 ஆம் ஆண்டு வெளிநாட்டில் வாழும் எங்கள் கிராமத்தினரால் ஏற்படுத்தப்பட்டு இன்றளவும் நிறுவகிக்கப்பட்டு வருகிறது.

**கேள்வி:** இந்த இணையதளத்தால் ஏற்பட்ட பயன்?

**பதில்:** அருகில் உள்ள கிராமங்களுக்கு மட்டுமே தெரிந்திருந்த எங்களின் கிராமத்தின் சிறப்புகள், இன்று உலகளவில் தெரியப்படுத்தப்பட்டு உங்களை போன்று நிறைய மாணவர்கள், பொதுமக்கள் தொடர்பு கொள்கின்றனர்.

**கேள்வி:** உங்கள் கிராம வளர்ச்சிக்கு பாடுபட்ட இரா.விசுவநாதன் ஐயா அவர்களின் நினைவாக ஏதேனும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறதா?

**பதில்:** அவர்களின் பெயரில் ஒரு அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டு, ஆண்டு தோறும் அவர்களின் பிறந்த நாளில் முதன் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும், ஏழை மாணவர்களின் மேற்படிப்பிற்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர 1000 தென்னை மரக் கன்றுகளை நட்டு வளர்கின்றனர்.

**கேள்வி:** உங்கள் கிராமத்தில் முக்கிய தொழில் என்ன?

**பதில்:** எங்கள் கிராமத்தில் விவசாயமே முதன்மையானது. எனினும் எங்கள் கிராமத்தவர் மேல்நாட்டில் சென்று பணிபுரிகின்றனர். ௬00 ஆண்டுகளுக்கு முன்னரே சிங்கப்பூரில் செய்தி தாள் நிறுவனம் நடத்தி வந்தனர்.

**கேள்வி:** வெளி நாட்டில் உள்ள உங்கள் கிராமத்தினர் உங்களுக்கு ஒத்துழைக்கவில்லையா?

**பதில்:** நிச்சயமாக, எங்கள் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டு மற்றும் நிறைவேற்றப்பட்டு வரும் அனைத்து திட்டங்களிலும் வெளிநாட்டில் வாழும் எங்கள் கிராமத்தினர் பொருளாதார ரீதியாக உதவி செய்து முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

**கண்டுணர்ந்தது**

திரு. இரா.விசுவநாதன் என்பவர் 50 ஆண்டுகளுக்கு மேலாக, சுயநலம் பாராமல் கிராம மக்கள் நலம் ஒன்றே முக்கியம் என்று பாடுப்பட்டதால், அன்று அரசியல் கட்சி கிராமத்திற்கு தேவைப்படவில்லை. ஒரு தனிமனிதன் 250 குடும்பங்களை தன் குடும்பமாக பாவித்து

வளர்த்திருக்கிறார். இக்கருத்திற்கு அங்கே யாரிடமும் வேறுபாடு இல்லை. ஆனால் இன்று புகையிலை, சாராயம் பயன்பாடு உள்ளதற்கான ஆதாரம் காணமுடிகிறது. (இன்றும் விற்பனை இல்லை). கட்சி கொடிகள் இல்லை. ஆனால் கட்சிகளும், கட்சி சார்புடைய தலைவர்களையும் காணமுடிகிறது. கலப்புத் திருமணம் பெருமளவு பாதித்திருப்பதையும் உணர்கின்றோம். காந்தியத்தை மறந்து விசுவநாதன் ஐயா அவர்களின் வழி நடக்க தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றனர்.

=====0=====